முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 979

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.06.2022**, சனிக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா போற்றி
ஞானிகளின் துணைகொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் மெச்சும் வள்ளலே போற்றி
வாழுகின்ற மாதவசியே போற்றி போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 21 ம் நாள், 04.06.2022 சனிக்கிழமை)
ஆற்றல்பட பலபிறவி செய்த உன் தவத்தை
அறமாக்கி கலியுகத்தில் அன்னதான உறுமாற்றி
3. மாற்றியே உலகோர்க்கு பசிபிணி
விரட்டுகின்ற உயர்ஞானமாக ஆறுமுகன் தந்துள்ளேன்
உள்ளபடி நீ தொடுத்த இந்த உயர் சேவை
உலகமெங்கும் சக்தியாக மாறி வர
4. வல்லமைகூட்டி உன் நாமஜெபத்தை
வையகத்தார் வணங்கினாலே போதுமப்பா
அப்பனே அதுவே உலகோர்க்கு ஞானமாகும்
அப்பனே அதுவே உலகோரை கடைத்தேற்றும்
5. ஆறுமுகன் அனைத்துமாக ஆற்றலாக
அரங்கன் உமக்கு நித்தம் நித்தம் சக்தி
மாறுதல் உலகம் அடையவேண்டுமென
மாதவபலமாக தந்து வர
6. வருகவே கலியுகத்தில் உன் நோக்கம்
வல்லமைபட வெற்றி காணக்கூடும்
தருகின்ற உன் உபதேசங்கள் அனைத்துமே
தரணியோரை காத்து வழி நடத்தும்
7. வழிநடத்தி வையகத்தை மீட்பதே
வரமாக பெற்று வந்த அரங்கனே
அழியாமை உன் வழி வருவோர் பெறுவர்
ஆறுமுக அரங்கா எனும் ஜெபதபத்தில் இருப்பவரெல்லாம்
8. எல்லோரும் ஞானவான்களாகி இந்த யுகத்தில் பெரும்பேறு காண்பர்
மிகைபட உன்வழி மேலான சக்தி முருகப்பெருமான் யானும் தொடர்ந்து அருளிவர
வருக உன்வழியில் உலகோர்க்கு
வரம்கிட்டும் இனி பிறவாத நிலை உண்டாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–